**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | திரு. மாரிமுத்து |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.11.2025**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி 1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். லோடுமேனாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது மகள் மகாலெட்சுமி என்ற தேன்மொழியை 1 வது எதிரிக்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். எனது மகளுக்கும் 1 வது எதிரிக்கும் கடந்த 13.03.2019 ம் தேதி திருமணம் செய்து கொடுத்தோம். 13 பவுன் நகையும், கட்டில், பீரோ, மெத்தை பண்ட பாத்திரங்கள், இரட்டை சீர் வரிசையாகச் செய்தோம். எனது மகளுக்கு 9 மாத ஆண் குழந்தை இருந்தது. திருமணம் ஆனதில் இருந்து, எதிரிகள் என் மகளிடம் நகை கேட்டும், அடகு வைக்க வேண்டும் என்றும், வண்டி எடுக்க வேண்டும் என்று சொல்லி என் மகளிடம் மாதம் தோறும் சண்டை போட்டார்கள்.

17 ம் தேதி 7 வது மாசம், 2021 ம் வருஷம் இரவு சுமார் 08.30 மணிக்கு என் மகள் எனக்கு போன் பேட்டு, அப்பா, அப்பா சண்டை நடக்குது, என்னை வந்து கூட்டிக்கிட்டு போப்பா என்று சொன்னார். எதற்காக சண்டை என்ன நடந்தது என்று நான் என் மகளிடம் கேட்டபோது, நகை கேட்கிறார்கள், அடகு வைக்க வேண்டும், வண்டி வாங்க வேண்டும் என்று சொல்லி என்னிடம் சண்டை போடுகிறார்கள் என்று சொன்னார். அதற்கு நான் என் மகளிடம், நான் நாளை வருகிறேன் இல்லைனா ஊருக்கு வரும் போது, பேசிக்குவோம் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். கொஞ்ச நேரத்திலேயே மீண்டும் போன் வந்தது, எனது மகளின் மாமியார் செல்போனில் இருந்து, போன் வந்தது,. பஞ்சவர்ணம் என்னிடம், உன் மகள் சீமைத்தண்ணீர் ஊத்திக்கிடுச்சு, மதுரை GH க்கு வந்துடுய்யா என்று சொல்லிவிட்டு cell phone ஐ switchoff செய்து கொண்டார். அதன் பின் நான் என் சித்தப்பா, பெரியப்பா ஆகியோருக்குத் தகவல் சொல்லிவிட்டு, மதுரை GH க்கு வர இரவு சுமார் 11.00 மணி ஆகிவிட்டது. வந்தவுடன், பஞ்சவர்ணத்திடம் எங்கம்மா, என் மகள் எந்த வார்டில் உள்ளது என்று கேட்டதற்கு, உன் மக பிணவறையில் இருக்கு போய் பார்த்துக்கோ என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல், அங்கிருந்தவர்களிடம் பிணவறை எங்கு இருக்கு என்று கேட்டு, அங்கு சென்று என் மகளைப் பார்த்தோம். மறுநாள் காலையில் தான் என் மகளைப் பார்க்கவிட்டார்கள். நாங்கள் பிணவறையில் என் மகளைப் பார்த்த போது, அவளது முகம் கருகியிருந்தது. அதன்பின், நாங்கள் பக்கத்தில் இருந்தவர்களிடம் விசாரித்த போது, எதிரிகள் என் மகளைக் கொன்றுவிட்டார்கள் என்றும் ஆட்களைக் காணவில்லை என்றும்

சொன்னார்கள். அதன்பின், சுப்பிரமணியபுரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எனது மகளின் இறப்பிற்கு, சிவா, பஞ்சவர்ணம், ராஜா ஆகியோர் தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை